ஏற்படுத்த உதவியும் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்பொழுது கால்நடை வளர்ப்பிலே மிக முக்கியமான பங்கு வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கிராம மக்களை ஈடுபடுத்துவது அவசியம்தான். அப்படி அவர்கள் விண்ணப்பித்தால் அரசாங்கம் பெருமளவில் ஏற்றுக்கொள்ள முடிவு செய்யும்.

திருப்பூர் நகருக்கு ஆம்புலன்ஸ் வண்டி.

* 401 வின.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் திருப்பூர் நகருக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை. திருப்பூர் நகருக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆம்புலன்ஸ் வண்டி 4—4—1971 முதல், தற்காலிகமாக உடுமலை பேட்டை நகருக்கு (E.S.I.) நடமாடும் மருந்தக வண்டியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் உடுமலைபேட்டை நடமாடும் மருந்தக வண்டி செயலற்ற நிலையில் உள்ளது. தவிரவும், உடுமலை பேட்டை ஆம்புலன்ஸ் வண்டியும் பழுதுபட்டுள்ளது. பழுது பட்டுள்ள உடுமலைபேட்டை ஆம்புலன்ஸ் வண்டியை உடனடியாகச் சரிபார்க்க துரித ஏற்பாடுகள் செய்யவும், அதுவரையில் உடுமலை பேட்டைக்கு வேறு வண்டி ஏற்பாடு செய்யவும் திருப்பூருக்கான ஆம்புலன்ஸ் வண்டியை மீண்டும் திருப்பூருக்கே உடனடியாக ஒதுக்கும்படியும், சுகாதார குடும்ப நலத்துறை இயக்குநர் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் போன வாரத்தில் ஆம்புலன்ஸ் திருப்பூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஆம்புலன்ஸ் வண்டியை நடமாடும் மருத்துவ வண்டியாக விடுவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டு 15 நாட்களுக்கு மேல் ஆகின்றது. உத்தரவு அனுப்பி வைத்து ஒரு வாரம் ஆகிறது.

Employees State Insurance Hospitals.

* 402 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of Employees State Insurance Hospitals in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?